**எஸ்.டி.சி .எண். 2956/2023 நாள்– 01.12.2025 பக்கம் /**

**ம.சா.1.அருணகிரி த/பெ.கருப்பச்சாமி**

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) எனக்கு தற்போது 59 வயதாகின்றது. நான் பனிரெண்டாவது வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். நான் தற்போது விவசாயம் செய்து வருகின்றேன். நான் பைனான்ஸ் மற்றும் கடையில் வேலை செய்து வருகிறேன். எதிரியை கடந்த 20 வருடங்களாக தெரியும். எதிரி எனது ஊருக்கு பக்கத்து ஊர் காரர் என்பதாலும், போகும் வரும் வழியில் சந்திப்பின் பேரில் பழக்கம் என்பதாலும் எனக்கு தெரியும். கரூர் காளியப்பனூர் மேற்கில் வசிக்கும் ராசப்பன் குமாரர் ஆறுமுகம் என்பவர் போஸ்ட் மேனாக இருந்தார் அதனால் எனக்கு தெரியும். கரூர் ஸ்ரீ நந்தாதேவி பைனான்ஸ் என்ற நிறுவனம் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னிடம் 25.05.2019 தேதிக்கு முனபாக பணம் கேட்டார். 25.05.2019 ம் தேதியன்று பணம் கொடுப்பதாக தெரிவித்திருந்தேன். நான் பைனான்ஸ்–ல் வேலை செய்து வருவதால், எதிரி என்னிடம் பணம் கேட்டாரா என்றால் இல்லை.

2) என்னிடம் தனிப்பட்ட முறையில் கைமாற்று கடனாக கேட்டார். எதிரி கேட்டவுடன் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை சுமார் நான்கு நாள்களுக்கு முன் கேட்டார் அதற்கு பின் தான் கொடுத்தேன். கடன் கொடுக்கும் போது நான் என்ன என்ன ஆவணங்களை கொண்டு வர சொன்னேன் என்றால் நான் எதனையும் குறிப்பிட்டு கேட்கவில்லை ஆனால் ஆதரவுக்கு எதாவது கொடுங்கள் என்றேன். எதிரியாக காசோலையை கொண்டு வந்து கொடுத்தார். எதிரி கொண்டு வந்த ஆவணத்தை நான் சரிபார்த்தேனா என்றால் பார்த்தேன். அதன் பின்பு தான் பணத்தை கொடுத்தேன். நான் ரொக்கமாக ரூ.1 இலட்சம் வைத்திருந்தேன். அந்த தொகைக்கான கணக்கு எதுவும் என்னிடம் இருந்ததா என்றால் கணக்கு எதுவும் இல்லை.அந்த தொகை விவசாயத்தின் மூலம் கிடைக்கப்பபெற்றதாகும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்

3) குறிப்பிட்ட தேதியில் பணத்தை திரும்பி தருவதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அந்த பணத்திற்கு ஈடாக காசோலையை தவிர வேறு எந்த ஆவணமாவது வாங்கினேனா என்றால் இல்லை. மேற்படி கடன் தொகைக்கான வட்டி ஒப்பந்தம் எதுவும் செய்து இருந்தேனா என்றால் இல்லை. இந்த காசோலை தொடர்பாக வேறு எந்த வழக்கும் எதிரியின் மீது தாக்கல் செய்யவில்லை. காசோலை சம்மந்தமாக எதிரிக்கு எந்த ஒரு அறிவிப்பும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன். அதனை அவர் பெற்றுக்கொள்ளவும் செய்துவிட்டார். நானும் ஆறுமுகம் இணைந்து கரூர் நகரம் 239, ஜவஹர் பஜார், 2 வது மாடியில் இயங்கி வரும் நந்தா தேவி இன்வஸ்மென்ட் மற்றும் நந்தா தேவி ஆட்டோ பைனான்ஸ் என்ற நிதி நிறுவனங்களின் நாங்கள் இருவரும் பணியாற்றி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

4) அப்போது கடந்த 2017 வருடம் எதிரி வரவு செலவு செய்து கணக்கு முடிக்க ஆதரவுகளை திரும்ப பெற்றுவிட்டார். அப்போது பெற விடுப்பட்டு போன காசோலைகளை எண். 481351, 481352 ஆகிய காசோலைகளை திரும்ப பெறாமல் இருந்ததை நானும், மேற்படி ஆறுமுகமும் சேர்ந்து இந்த எதிரியிடம் அடாவடியாக துர்லாபம் அடைய இந்த காசோலை வழக்கை தாக்கல் செய்துள்ளதை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இது சம்மந்தமாக அரவக்குறிச்சி காவல் நிலையத்திலும், புகார் மனு அளித்து நான் விசாரணைக்கு ஆஜராகமல் பொய்யான விபரம் தந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் குற்ற உணர்வால் காவல் நிலையத்திற்கு வராமல் வழக்கு நிலுவையில் உள்ளதை காரணம் சொல்லி விசாரணைக்கு ஆஜராகமல் இருந்துவிட்டேன் என்றால் சரியல்ல. உண்மையில் காசோலை தொகை கிடைக்க வேண்டி இருந்தால் எதிரி மீது சிவில் வழக்கை உரிய காலத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்

5) எனவே காசோலை சம்மந்தமாக யாதொரு பிரதி பிரயோஜனமும் அடையாததால் பிரதி வாதிகளின் காசோலைகளை தவறுதலாக உபயோக படுத்தி வீண் மன உளைச்சலுக்கு ஆளாகும் விதத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதை இந்த எதிரியின் செலவு தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் சார்பில் வழக்கறிஞர் மோதிபிரசன்னா அவர்கள் ஆஜராகி ம.சா.1 யை பகுதியாக குறுக்குவிசாரணை செய்து கூடுதல் குறுக்குவிசாரணைக்காக கால அவகாசம் கோரியதால் அவரது வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்